# திருவள்ளுவத்தில் பகுத்தறிவு மேலாண்மை

முனைவர் அர. கண்ணன்
உதவிப்பேராசிரியர்,
ஆர்.வி.எஸ். கலை மற்றும் அறிவியல் கல்லூரி.
சூலூர், கோவை 641402.
vaanavilkannan@gmail.com

2

**ஆய்வு நோக்கம்**

உலகில் உயர்தனிச் செம்மொழி என்னும் தகுதிப்பாடுடைய மொழிகளுள் இன்று வரை தன்னிகரில்லா மொழியாகத் திகழ்வது தமிழ்மொழி. ஆண்டுகள் பல கடந்தாலும் மக்களுடைய நாவிலும் அவர்தம் வாழ்விலும் இன்பம் பயக்கும் மொழியாக வலம் வருவது தமிழ் மொழி. உலகின் மூத்த சிந்து சமவெளி நாகரிகத்தோடு தொடர்புடையது தமிழர் தம் பண்பாடும், நாகரிகமும். அத்தகைய தமிழர் வாழ்வில் அணையா விளக்காக இருந்து மக்கள் தம் அக இருளைப்போக்கி பகுத்தறிவு என்னும் பகலவனைத் தந்த நூலாக இலங்குவது திருக்குறள். அழியாப்புகழ் கொண்ட அறிவுக்கருவூலத்தில் எண்ணற்ற பகுத்தறிவுச் சிந்தனைகள் மேலோங்கியிருக்கின்றன. அதனை வெளிப்படுத்தும் நோக்கில் **“திருவள்ளுவத்தில் பகுத்தறிவு மேலாண்மை**” என்னும் ஆய்வுக்கட்டுரை அமைகிறது.

**திறவுச்சொற்கள் :** திருக்குறளின் பெருமைகள்- அறிவு – விளக்கம் - பகுத்தறிவு - பகுத்தறிவுக் கொள்கையும் திருவள்ளுவரும் - சாதி ஒழிப்புக் கொள்கை - மூட ஒழிப்புக் கொள்கை – இருவினை - ஊழ் ( தலைஎழுத்து) - பகுத்தறிவின் வேர் – அரிது

## முன்னுரை - திருக்குறளின் பெருமைகள்

உலக மக்கள் நல்வாழ்வு வாழ வழிகாட்டிய சிந்தனையாளர்களின் வரிசையில் பெருமையோடு வீற்றிருக்கிறார் திருவள்ளுவர். அவர் இயற்றிய திருக்குறள் மனிதகுலம் எந்த இடத்தில் வாழ்ந்தாலும், எந்தச்சூழலில் வாழ்க்கை முறையை மேற்கொண்டாலும் அங்கெல்லாம் ஒளியைப் பாய்ச்சி வாழ்வு சிறந்து விளங்க வழிகாட்டும் நூலாகவும், சாதிசமயங்களால் வேறுபட்டவர்கள் அனைவரும் ஏற்கும் கருத்துப் பொதுமையும், கற்பவர் நெஞ்சில் ஆழப்பதியும் வண்ணம் எடுத்துரைக்கும் வெளிப்பாடும், இலக்கிய அழகு பொலிய அமைந்த மொழிநடையும், காலந்தோறும் புத்தம் புதிய சிந்தனையைத் தூண்டும் அறிவுப் பெட்டகத்தையும் எடுத்துரைக்கும் நூலாகவும் உலகப்பொதுமறை திகழ்கிறது.

## அறிவு – விளக்கம்

உலகில் எண்ணற்ற உயிரினங்கள் தோன்றின. அவற்றுள் ஒன்றாக மனிதனும் தோன்றினான். விலங்கொடு விலங்காய் வாழ்ந்த அவன் வாழ்க்கையில் படிப்படியான மாற்றங்கள் ஏற்பட்டன.

அம்மாற்றங்கள் அவனுள் முகிழ்த்த சிந்தனை ஆற்றலால் ஏற்பட்டன. இச்சிந்தனை ஆற்றலே பிற உயிரினங்களிலிருந்து மனிதனை வேறுபடுத்தியது. எல்லா உயிரினங்களையும் இயற்கை ஆற்றல்களையும் அடக்கவும், ஆளவும் அவனுக்கு உதவியது. அவனது நாகரிக வரலாற்றின் தொடக்கத்திற்கு வித்தாக அமைந்தது. .

தமிழர் அறிவை குணமாகக் கொண்டனர். அதனால் அக்குணத்தை உடையதாகிய உயிர் குணியாயிற்று. உயிரின் குணமாகிய அறிவு விளங்குவதைத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

**“ பெருமையும் உரணும் ஆடூஉ மேன” – தொல். பொருள். கள. 7**

**“ செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்**
**அறிவும் அருமையும் பெண்பா லான” - தொல். பொருள். பொரு. 14**

என்பன அந்நூற்பாக்கள். இவையும் இவற்றின் இளம்பூரணது முதலியோர் உரைகளும் மேற்படி கருத்தை உறுதி செய்கின்றன.

**“குணனும் அறிவும் கொள்கையென் றாகும்” –திவாகரம் .1552**

எனப்பிற்காலத்து எழுந்த திவாகரமும் அறிவின் திறத்தை எடுத்துரைத்துள்ளது.

தமிழில் அறிவு என்னும் சொல், ‘அறி+உ’ எனப்பிரியும். அறி’ வினைப்பகுதி: உ தொழிற்பெயர் விகுதி. ‘அறி’ என்னும் வினைப்பகுதி ‘அள்’, ‘அறு’ என்னும் வேர்ச் சொல்லிலிருந்து தோன்றியது என்பர்.

அறிவு என்னும் சொல் பல அடைமொழிகள் பெற்றுத் திருவள்ளுவரால் வழங்கப்பெற்றுள்ளது. வாலறிவு(2), பேரறிவு (218), புல்லறிவு(246), உண்மை அறிவு(513), உள்ளறிவு(677), ஆயும் அறிவு(198) என்றெல்லாம் உள்ளன.

அறிவின் வாயிலாக தன்னுடைய தேவையைப் பெருக்கியதோடு பண்பாட்டுச் செழுமைக்கு ஏற்ற நயமாக மனித இனம் அறிவைத் தேடிச்சென்றது என்பதை அறியமுடிகிறது.

**பகுத்தறிவு**

உயிரின் படிமுறை வளர்ச்சியைப் படிப்படியாக மலர்த்தி ஐயறிவுயிர் என்றும், ஆறாவது அறிவு பெற்றவன் மாந்தன் என்றும் உயிரியல் பாங்கைத் தமிழர் கண்டனர். இதனை உணர்வாலும், அறிவாலும் தாம் கண்டனர். ஆறாவது அறிவு பகுத்தறிவு என நிறைவாக்கினர்.

பகுத்தறிவு என்னும் சொல் திருக்குறளில் இல்லை.என்றாலும் இச்சொல்லை ஆக்குவதற்கு வழி காட்டுவது போன்ற சூழல் உள்ளது. வள்ளுவப் பெருள்தகை

**“ பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்றுள் எல்லாம் தலை” குறள். 322**

என்னும் குறள் வழி பகுத்து என்னும் சொல் பகுத்தறிவின் மேன்மையைக் காட்டுவதாக கொள்ளலாம்.

'பகுத்தல்' என்றால் பிரித்தல் - பிரித்துப்பார்த்தல் என்று பொருள். நன்மை , தீமையைப் பிரித்துப் - பகுத்துப் பார்க்கும் அறிவு என்பதே பகுத்தறிவு என்பதன் பொருள். பகுத்தல் என்னும் சொல்லின் பகுதி 'பகு'. அதன் அடித்தளச் சொல்லை அறிமுகம் செய்வது போன்றும், அதனைப்பலவகையாக வளர்ப்பது போன்றும் உள்ள அமைப்பைத் திருவள்ளுவத்தில் காணலாம்.

"திருக்குறள் ஓதற்கெளிதாய், சிந்தைக்கும் செவிக்கும் இன்பம் பயப்பதாய், நவில்தோறும் நயம் பெருகும் நூலாய் விளங்குகின்றது. ஏனைய பழந்தமிழ் நூல்களில் காணப்படுகின்ற கடுந்தமிழ்ப் பதங்களும், பத்துப் பாட்டு முதலிய நூல்களிலுள்ள இறுக்கமும் மயக்கமும் திருக்குறளில் இல்லை. நூல் முழுமையும் திருந்திய செப்பமும் செம்மையும் வாய்ந்து விளங்குகின்றது. நூலின்கண் அமைந்து விளங்கும் இயல்களும், அதிகாரங்களும் ஒன்றற்கொன்று இயைபுடையனவாய்ப் பல தொடர்களால் அமைந்த அருமணி வடம்போல் விளங்குகின்றன" என்று பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் திருக்குறளின் மேன்மையைப் பாராட்டுவார்.

**பகுத்தறிவுக் கொள்கையும் திருவள்ளுவரும்**

ஐந்திணைகளை வாழ்விடமாக கண்ட தமிழக மக்கள் அவவ்ந்நிலங்களில் உறையும் கடவுள்களாக, திருமாலையும், முருகப்பெருமானையும் கொற்றவையையும், இந்திரனையும் வழிபடு தெய்வங்களாகக் கண்டனர். இத்தெய்வங்கள் நிலத் தெயவங்களாக இருந்தாலும்; கடவுள் என்னும் பொதுத் தன்மைக்குள் உலவின. பொதுவாக கடவுளைக் குறிக்கும் சொற்களாக, இறைவன். கடவுள். தெய்வம் என்னும் மூன்றும் தொன்றுதொட்டு சொல்லப்பட்டு வருகின்றன.

பழந்தமிழ் இல்கியங்கள் 'கடவுள்'; என்பதனை உருவம் உள்ளதாக காட்டின.

**" வேறு பல் உருவின் கடவுட் பேணி' கபிலர், குறிஞ்சிப்பாட்டு. 209**

**" காரியுண்டிக் கடவுளது இருக்கையும்" மலைபடுகடாம். 83**

என்னும் அடிகளால் அறியலாம். கடவுள் என்பது வடிவம் உடையதாக அதனைக் கடந்த உள்ளொளியாக இருப்பது என்றும் சுட்டலாம்.

தெய்வம் இயற்கை நிகழ்சியால் தோன்றிப் பெருவலிமையும், திறனும் கொண்டதாக வானத்திலுள்ள கதிரவனைக் குறித்தது. குறிக்கிறது. இதன் தொடர்பில் மண்ணில் தோன்றிய மாந்தரும் வாழ்வில் அரியன செய்த, நெறியன படைத்த உரிய பெரும்புகழ் பெற்றவர் மண்ணில் வாழ்வாங்கு வாழ்ந்தவராவார். அவர் உயிர் துறந்ததன் பின் உயிர் மட்டும் ஆவியாக வானத்தில் உறையும். அவ்வாவி என்னும் வாழ்வாங்கு வாழ்ந்தவன் வானத்தில் கதிரவனுடன் எண்ணத்தக்க தெய்வம் ஆவார், என்பதனை,

**" வையத்தள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்" குறள். 50**

என்றார். இக்குறள் இல்வாழ்க்கையின் இறுதியான நிறைவு நிலையில் வைத்தும்

எண்ணத்தக்கது.

திருவள்ளுவர் ஆறு குறட்பாக்களில் தெய்வத்தை எடுத்தாள்கின்றார். தெய்வத்திற்கு முன்பாக மாந்தனே முதன்மை நிலையில் வைத்தப் போற்றப்பட்டான்.

மாந்தன் முயற்சி உடல் வருந்தியேனும் செய்யப்பட வேண்டும். தக்க பயன் கிட்டும். தெய்வத்தால் ஆகாததையும் கிட்டச் செய்யும் என்கிறார். இதனை.

**"தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்**
**மெய்வருத்தக் கூலி தரும்"** **குறள். 610**

என்கிறார். தெய்வத்தால் இயலாததை மாந்தன் முடிப்பான் என்றது மாந்தனுக்கு அடுத்தபடியில் தெய்வததை வைக்கிறது.

அவற்றால் பகுத்தறிவு கண்கொண்டு நோக்கினால் மாந்த சமுதாயம் கடவுளையும், இறைவனையும் போற்றினாலும் தன் தொழில், செயல் என்று வருகின்ற பொழுது அவனது எண்ணங்கள் அத்தெய்வத்திற்கு முன்பாக செல்கிறது என்பதும், மானுட சமூகம் மெய்யை வருத்தக் கூலி பெற முடியும் என்ற பகுத்தறிவின் நுட்பத்தை எடுத்துரைத்துள்ளதையும் காணமுடிகிறது.

**சாதி ஒழிப்புக் கொள்கை**

'ஜாதி' என்னும் வடசொல்லின் தமிழ் எழுத்து உருவம் 'சாதி' என்னும் சொல். அது வடமொழியில் நன்மை . சிறப்பு, தொகுப்பு, என்னும் பொருள்களைத் தரும். அப்பொருளுடன் தான் தமிழில் அச்சொல் புகுத்தப்பட்டது. தொல்காப்பியரும்,

"**நீர்வாழ் சாதியும்**" என்று இரு இடங்களில் கையாண்டமள்ளார். கடியலூர் உருத்திரங்கண்ணனாரும்,**" கடுப்புடைப் பறவைச் சாதி**" என்று பறவை இனத்தைப் பாடியுள்ளார்.

மாந்தருள் பிறப்பால் பிரிவினைப் படுத்தியவர் வடமொழி ஆரியரேயாவர். வடமொழிப் பேராசான் இராகுல சாங்கிருத்தியாயனும்.

'இந்த வசிட்டரும் விசுவாமித்திரரும் வந்துதான் சாதி வேற்றுமைகளைத் தொடங்கி வைத்தார்கள்"; ( வால்கா முதல் கங்கை வரை ப. 227) என்று தம் நூலுள் எழதியுள்ளார். அவ்வேற்றுமையைத் தமிழ் மண்ணிலும் புகுத்தினர். அதற்கு முன் தமிழர் பிறப்பால் உயர்வு தாழ்வின்றியே வாழ்ந்தனர்.

திருவள்ளுவர் மேலோர் . கீழோர் என்ற பாகுபாட்டில் மக்களை குறித்து கூறியிருந்தாலும் அவர் சாதிய வருணத்தைக் காட்டவில்லை. மாறாக கல்வியில் மேலோர், கீழோர் நிலை இருந்து வருகின்றதை தம் குறள் வழி உரைத்துள்ளார். இதனை,

**"மேற்பிறந்தா ராயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்**
**கற்றார் அனைத்திலர் பாடு"** **குறள். 409**

என்றும், பெருமை , சிறுமை நிலையில்.

**" மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்**
**கீழல்லார் கீழல் லவர்" குறள். 973**

இவ்வாறு மேற்பிறந்தார், கீழ்ப்பிறந்தார், மேலிருந்தும், கீழிருந்தும் என்று நாட்டிலிருந்து பிறப்பின் பிரிவைச் சுட்டினார். ஆனால் சாதி என்னும் பொருள் தரும் பால், இனம், என்னும் சொற்களைக் கையாளவில்லை.

பாண்டியன் பாடிய

**" பிறப்போரன்ன உடன் வயிற்றுள்ளும்**
**சிறப்பின் பாலால் தாயும் மனம் திரியும்" புறம். 183**

என்னும் அடிகள் சாதியத் தோற்றத்தின் அடிப்படையாகக் கண்ட வள்ளுவப் பெருந்தகை,

**" பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்" குறள். 972**

என்னும் குறளைப்படைத்துள்ளார். இக்குறள் வாயிலாக எல்லா உயிர்க்கும் பிறப்பு ஒத்ததே என்று சாதிப் பாட்டைச் சாடி ஒரு சமுதாயப் பகுத்தறிவு முனையைக் காட்டினார் என்றால் அது மிகையாகாது.

மனு, உபநிடதம் முதலியவற்றை வடமொழியில் 'சாத்திரம்' என்பா. வடமொழியிலுள்ள சாத்திரம் ஒவ்வொன்றும் சாதிப்பிரிவையும், அவற்றுள் உயர்வு தாழ்வையும் அவற்றுள்ளளும் பார்ப்பனரே உயர்ந்தவர் என்பதையும் சொல்லாமல் செல்லாது. இதனை கவிபாடிய பாரதி,

**' சாத்திரங் கண்டீர் சாதியின் உயிர்த்தலம்' என்றும்,**

**' சாத்திரம் இன்றேல் சாதியும் இன்றாம்" என்றும்**

**"ஞானம் பொய்க்க பொசிக்குமாம் சாதி" என்றும் பாரதியார் பாடல்கள் 2456: 2-6**

பாடியுள்ளதிலிருந்து அவர் காலத்தில் சாதிபேதம் மிகுந்து காணப்பட்டதை அறியமுடிகிறது.

**மூட ஒழிப்புக் கொள்கை**

பகுத்தறிவின் உச்சமாக இருப்பதை மக்களைப் பிடித்திருக்கும் மூடம் ஆகும். மூடம் என்றால் அறியாமையின் மேல் எல்லை. எதற்கும் காரணத்தை அறியாமை, அறிவிற்குப் பொருந்துமா என்பதை அறிய முயலாமை, அறிந்தும், அறியாமலும், கண்ணை மூடிக் கொண்டு கடைபிடிப்பது - இவற்றின் ஒட்டு மொத்தமே மூடம் ஆகும்.

மூடப்பழக்க வழக்கங்களை கண்மூடிப் பழக்கம் எனபது நாட்டுப்புற மக்களிடையே மிகுந்திருக்கும். இக்கண்மூடிப்பழக்கம் பகுத்தறிவை நெருங்காதது. இக்காலத்தில் இவ்வகை மூடங்கள் பலவாக உள்ளன.

| | | | |
|---|---|---|---|
| **சகுணம் (எதிர்ப்படல்)** | **:** | **சடங்கு** | **(கரணம்)** |
| **விரதம் (நோன்பு)** | **:** | **சாத்திரம்** | **(கலைநூல்)** |
| **சோதிடம (கோள்பயன்)** | **:** | **அருச்சனை** | **(மலர்ப்போற்றி)** |

**ஆராதனை (வழிபாடு) : விதி (தலையெழுத்த)**

**மோட்சம் (வீடுபேறு) : நரகம் (நிரயம்)**

இவையனைத்தம் காரணங்காணாப் பழக்கமாக தமிழ் மண்ணில் சொல்லப்பட்டு வருகின்றன.

திருவள்ளுவர் தம் நூலில் அமைத்துள்ள சில கருத்துகள் நாம் கருதும் பகுத்தறிவிற்கு ஈடு கொடுக்காமலும் உள்ளன. அவற்றிற்கு அவர் அமைத்துள்ள சொற்களே அறிகுறிகளாக உள்ளன.

**'இருவினை" (5), 'ஊழ்; (380), 'எழுபிறப்பு'(62), 'மறுமையும் இம்மையும'; (98), 'மேலுலகம்' (226), 'புத்தேளுலகம்' (58), 'இன்னா உலகம்' (243), 'வேட்டல் வேள்வி செய்தல'; (256)** இச்சொற்கள் கொண்ட பொருள்கள் பகுத்தறிவிற்கு அப்பாற்பட்டவையாக இருக்கலாம். ஆனால் அவை குறிக்கப்பட்டுள்ள இடம், குறிக்கும் முறை, குறிப்பாகச் சுட்டும் கருத்து முதலியவை திருவள்ளுவரின் உள்ளார்ந்த நோக்கங்களை அடையாளங் காட்டுகின்றன.

**இருவினை**

ஆன்மிகத்தார் நல்வினை, தீவினை என இரண்டை வகுத்துள்ளனர். நல்வினை செய்தால் இம்மையிலும் நன்மை கிட்டும்: மறுமையிலும் நன்மை கிட்டும்: தீவினை செய்தால் முறையே இரண்டிலும் தீமை சேரும் என்று சுட்டியுள்ளார்.

திரவள்ளுவர் நல்வினை. தீவினை எனனும்; இரண்டு வினைகளையும் தமது குறளில் வெளிப்படுத்தியுள்ளார். ஒருவன் தன்மேல் தானே அன்பு கொள்ள வேண்டும், அவ்வாறு கொளல் பிறர் எவர்க்கும் தீய செயல் சிறிதளவும் செய்யக்கூடாது என்பதை,

**" தன்னைத்தான் காதல னாயின் எனைத்தொன்றும்**
**துன்னற்க தீவினைப் பால்" குறள் .209**

என்னும் குறள் எடுத்துரைக்கும.

பேசமுடியாதவாறு நாக்கு இயங்குதல் அற்று விக்கல் எழுவதற்கு முன்பே நல்ல செயல்களை விரைவாகச் செய்தல் வேண்டும் என்று நல்வினை திறத்தை .

**" நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை**
**மேற்சென்று செய்யப் படும்" குறள்.335**

இந்த இரண்டு குறட்பாக்கள் வாயிலாக தீவினை. நல்வினை என்னும் கருத்தாக்கம் பெறப்படுகிறது. திருவள்ளுவர் வினை என்று குறிக்குமிடங்களில் எல்லாம் செயல், தொழில் என்னும் நடைமுறைப் பொருளிலேயே எழுதியுள்ளார். வளமும், நலமும் பெருமையும் நல்வினையால் வரும் என்பர். ஆன்மிகத்தார் இவற்றை மறுப்பது போன்று

**' பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்**
**கருமமே கட்டளைக் கல்" குறள். 505**

என்னும் குறளின் மூலம் ஒருவன் செய்யும் நன்மை தீமைகளுக்கு அவனவன் செயலே அளவுக்கல்

என்றார். தொடக்க அதிகாரத்திலேயே இருவினையை இருட்டாக்கிய வள்ளுவர்தம் எழதுகோல் பகுத்தறிவு முனை கொண்டதாகும்.

**ஊழ் ( தலைஎழுத்து)**

'ஊழ்' என்பது இப்போது 'விதி' எனப்படுகிறது. விதிப்படிதான் நடக்கும் என்னும் நம்பிக்கை மிகப்பெரும்பாலோரிடத்தில் நிறைந்துள்ளது. 'ஊழ்' என்னும் சொல் முறை, மலர்ச்சி. பழமை, குணம், பகை, முதிர்ச்சி எனப் பல பொருள்களைத் தரும். ஆனால் சங்க இலக்கியம் தவிர பிற நூல்கள் அனைத்தும் 'விதி' என்னும் பொருளையே மிகுதியாகத் தருகின்றன.

அறத்துப்பாலின் இறுதி அதிகாரமாக இடம்பெறுவது ஊழ். ஊழை ஆக்கும் ஊழ் 'ஆகூழ்' என்றும், போக்கும் ஊழ் ' போகூழ்' என்றும், இழப்பை ஏற்படுத்தும் ஊழ் 'இழவூழ்' என்றும் ஊழின் செயல்பாட்டைக் காட்டுகின்றார் செந்நாப்போதர்.

ஊழின் பெருவலிகளை வள்ளுவர் தம் குறளில் எடுத்தாண்டுள்ளதன் மூலம் மானுட சமுதாயத்தின் பகுத்தறிவிற்கு ஊழ் உறுதுணையாக இருந்து பல்வேறு காரியங்களை நிறைவேறும் என்பதை காண முடிகிறது. சான்றாக சிலவற்றைச் சுட்டலாம்.

**" ஆகூழ்" அயற்சியில்லாத முயற்சியைத்தரும் (371)**

**" போகூழ்" சோம்பலை உண்டாக்கும் (371)**

**" இழவூழ்" அறிவுள்ளவனையும் பேதையாக்கும் (372)**

**" செல்வ வளமும் அறிவு நலமும் ஊழால் வேறு வேறாய் அமையும்" (374)**

**"கோடிகோடியாய்ச சேர்த்தாலும் நல்ஊழ் இருந்தால்தான் பயன் கொள்ள முடியும்"** (377)

என்று ஊழின் பெருவலியை எடுத்துரைக்கிறார் வள்ளுவப்பெருந்தகை.

**பகுத்தறிவின் வேர் – அரிது**

மானுட சமுதாயம் தனக்குவமை இல்லாதான் தாளைப் போற்றி வாழ்ந்தாலும் தம்முடைய மனக்கவலைகளை மாற்ற வேண்டுமெனில் அவன் செய்யும் தொழிலில் முதன்மை பெற வேண்டும் என்கிறார் திருவள்ளுவர். திருக்குறளில் அரிது என முடியும் குறட்பாக்கள் பத்தொன்பது உள்ளன. இக்குறட்பாக்கள் அனைத்தும் பல்வேறு பகுத்தறிவுச் சிந்தனைகளை வெளிப்படுத்தி நிற்கின்றன.

பகுத்தறிவு என்பது அறிவின் மறுபக்கம். ஒருவன் தன் வாழ்க்கையில் நல்ல குணத்தைப் பெற்று பிறருக்கு உதவி செய்யும் பண்பினைப் பெற்றவனாக இருந்தால் அவனுக்கு இந்த மண்ணுலகத்தையும், விண்ணுலகத்தையும் கொடுப்பினும் ஈடாகாது என்று பகுத்தறிவின் வேராக அரிதினைக் காட்டுகின்றார். இதனை,

**"செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்**
**வானகமும் ஆற்ற லரிது"** **குறள். 101**

என்கிறார்.

இவ்வாறு வள்ளுவப் பெருந்தகை அரிதான காரியங்களைச் செய்யும் பொழுது

இயல்பாகவே பகுத்தறிவுச் சிந்தனை மேலோங்கும் என்பதை குறிப்பால் உணர்த்திச் செல்கிறார்.

**தொகுப்புரை**

- வள்ளுவம் மானுடம் செழிக்கும் வகையில் என்றும் துணைநிற்கும் நூலாகத் திகழ்கிறது.
- அறிவு என்பது மானுட சமுதாயத்தின் வழிகாட்டியாகவும், தனிமனிதன் பெற்ற பேறாகவும் விளங்குகிறது.
- திருவள்ளுவர் பகுத்தறிவு என்னும் சொல்லைப் பயன்படுத்தாவிட்டாலும் அறிவின் வெளிப்பாட்டில் பல்வேறு பகுத்தறிவுச் சிந்தனைகளை எடுத்துரைத்துள்ளார்.
- கடவுள் என்னும் தன்மையில் அரசன். தனிமனிதன் இருவரையும் அடுத்தே கடவுள், இறை, தெய்வம் என்னும் சொற்களுக்கு இடம் தந்துள்ளார்.
- வையகத்தில் நல்வினை தீவினைகளை ஆராய்ந்து நடந்தால் அவன் இவ்வுலகம் முழுதும் போற்றப்படுவான் என்பதையும் வெளிக்காட்டியுள்ளார்.
- மக்களிடம் வெளிப்படுகின்ற மூட நம்பிக்கைகள் களையப்பட வேண்டும் என விரும்பியவர் வள்ளுவப் பெருந்தகை.
- ஊழ் என்னும் விதியால் ஒருவனுடைய தலையெழுத்தை மாற்ற முடியும் என்ற பகுத்தறிவுக் கருத்தையும் விளக்கியுள்ளார்.
- பகுத்தறிவின் வேராக அறிவு இருந்தாலும் அரிதான செயல்களைச் செய்யும் போது மானுட சமுதாயம் புதிய நடையில் வலம் வரும் என்றும், தம் சொற்கள் வாயிலாக எடுத்துரைத்துள்ளதை கட்டுரை வாயிலாக தெளியலாம்.

**துணை நின்ற நூல்கள்**


1. திருவள்ளுவர், திருக்குறள், புலவர் சி. இராசியண்ண்ன. (உ.ஆ), மீனா புத்தக நிலையம், சென்னை, 600008.
2. இளம்பூரணர் , தொல்காப்பியம், உரையாசிரியர், கழக வெளியீடு, சென்னை.
3. இராகுல் சாங்கிருத்தியாயன், வால்கா முதல் கங்கை வரை, நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2018
4. கோவை இளஞ்சேரன், திருவள்ளுவத்தில் பகுத்தறிவு முனை, கலைக்குடில் வெளியீடு, தஞ்சாவூர், 1996.
5. புறநானூறு மூலமும் உரையும், கழக வெளியீடு, சென்னை.
6. திவாகரர், திவாகர நிகண்டு, கழக வெளியீடு, சென்னை.